செ. கு. எண்: 160

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 29.6.2013

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. P.கேசவன் அவர்கள் உடல்நலக் குறைவால் 15.6.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாநகரம், பந்தயசாலை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. R.பாலகிருஷ்ணன் அவர்கள் 15.6.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாநகரம், கே.கே.நகர் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. A.சரவணன் அவர்கள் உடல்நலக் குறைவால் 17.6.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், பெருநகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. K.சந்திரசேகரன் அவர்கள் 19.6.2013 அன்று கூவத்தூர், கிழக்கு கடற்கரை சாலை அருகே சாலையைக் கடக்கும் போது ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. ரவி அவர்கள் 19.6.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.முனியசாமி அவர்கள் 19.6.2013 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி போக்குவரத்து பிரிவு காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. C.ராஜேந்திரன் அவர்கள் 19.6.2013 அன்று கணியாமூர் கிராமம்,

சின்னசேலம் - கள்ளக்குறிச்சி சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், சத்திரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. A.ஆதிநாதன் அவர்கள் 20.6.2013 அன்று வால்டாக்ஸ் சாலை அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. K.திருப்பதி வெங்கடாஜலபதி அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 20.6.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் சந்திரசேகரன்; சிறப்பு உதவி ஆய்வாளர்கள் கேசவன், ரவி, முனியசாமி, திருப்பதி வெங்கடாஜலபதி; தலைமைக் காவலர்கள் பாலகிருஷ்ணன், ஆதிநாதன்; முதல் நிலைக் காவலர்கள் சரவணன் மற்றும் ராஜேந்திரன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலை விபத்தில் உயிரிழந்த உதவி ஆய்வாளர் சந்திரசேகரன், சிறப்பு உதவி ஆய்வாளர் முனியசாமி, தலைமைக் காவலர் ஆதிநாதன், முதல் நிலைக் காவலர் ராஜேந்திரன்; உடல்நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர்கள் கேசவன், திருப்பதி வெங்கடாஜலபதி, முதல் நிலைக் காவலர் சரவணன், மாரடைப்பால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் ரவி, மற்றும் தலைமைக் காவலர் பாலகிருஷ்ணன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**